**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No.12/2024 - PW- 21**

| | |
|---|---|
| Name | திரு. டில்லிபாபு |
| Husband/Father Name | பத்மநாபன் |
| Village /Area | கவரப்பேட்டை |
| Taluk | கும்மிடிப்பூண்டி |
| Occupation | காவல் ஆய்வாளர் |
| Age | 48 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 13.10.2025.

**(எதிரி ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் தற்போது V4–இராஜமங்கலம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 26.03.2015ம் தேதி அரக்கோணம் நகர காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்த போது மனுதாரர் நந்தக்குமார் என்பவர் காலை 10.00 மணிக்கு கொடுத்த புகார் மனுவின் மீது குற்ற எண். 180/2015 சட்ட பிரிவு 302 மற்றும் 380 இதச படி வழக்கு பதிவு செய்து விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அது **அதசாஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. காலை 10.45 மணிக்கு சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தை சாட்சிகள் பாபு மற்றும் இராமன் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வையிட்டு மாதிரி வரைப்படம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன் அவைகள் முறையே **அதசாஆ.8** மற்றும் **அதசாஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

சம்பவ இடத்தில் கொலையுண்டு இறந்து கிடந்த

கோமதியம்மாள் காதில் அணிந்திருந்த பொன்னால் ஆன சாதா 5 இலை கம்மல் பிளாஸ்டிக் பட்டனுடன் இருந்ததை 13.30 மணிக்கு அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றி அவரிடம் வாக்குமூலம் பதிவு செய்தேன். பிறகு சம்பவ இடத்தில் சாட்சிகள் 1 முதல் 5 வரையும் மற்றும் 8 முதல் 15 வரையிலான சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அதன் பிறகு சம்பவ இடத்தை தணிக்கை செய்யும் எதிரியை கண்டுபிக்க வேண்டி மோப்ப நாய்க் குழுவிற்கு தகவல் தெரிவிக்க முதுநிலை காவலர் 172 தனசேகர் என்பவருடன் மோப்ப நாய் சீட்டா வரவழைக்கப்பட்டது. அவரிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. பிறகு சம்பவ இடத்தில் எதிரியின் கைவிரல் ரேகைகள் உள்ளதா என்று அறிய தனிவிரல் ரேகைக்கூடத்திற்கு தகவல் தெரிவித்ததில் 1 விரல் ரேகை கூடத்தில் இருந்து தனி கைவிரல் ரேகை பிரிவு ஆய்வாளர் திரு.சங்கர் என்பவர் சம்பவ இடத்திற்கு வந்து சம்பவ இடத்தில் வேறு கைரேகைகள் கிடைத்துள்ளதாக தெரிவிக்க அவரிடம் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன் அந்த அறிக்கை அசா.14 ன் மூலமாக அதசாஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த அறிக்கையுடன் கூடிய குறுந்தகடு **சா.பொ. 6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பிறகு 14.00 மணிக்கு காவலர் 2331 இராஜ்குமார் என்பவர் வசம் பிரேதத்தை பிரேத கூறாய்வு செய்ய அரக்கோணம் அரசு மருத்துவமனை சவக் கிடங்கிற்கு அனுப்பி வைக்கப்பட்டது. பிறகு இறப்பின் காரணம் குறித்து பிரேத கூறாய்வு செய்ய அறிக்கைகளுடன் மருத்துவரிடம் அறிக்கை செய்ய Dr.கே.சங்கர் பிரேத கூறாய்வு செய்தார். பிரேத விசாரணை வேண்டி கொடுக்கப்பட்ட வேண்டுகோள் கடிதம் **அதசாஆ. 10** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதன் பிறகு இறந்து

போனவரின் உடல் உள்உறுப்புகளை மேற்படி காவலரின் மூலம் தடய அறிவியல் ஆய்வகத்திற்கு பகுப்பாய்விற்கு அனுப்பி வைக்கப்பட்டது. பிறகு பிரேதத்தின் மீது கைப்பற்றப்பட்ட இரத்தக் கறை படிந்த மெரூண் கலர் வெள்ளை பூப்போட்ட புடவை, ஆரஞ்சு கலர் பாவாடை, மெருண் கலர் ஜாக்கெட் ஆகிய வழக்கு சொத்துக்களை படிவம் –95 ல் கைப்பற்றி அவைகளை குற்றவியல் நீதிமன்ற எழுத்தர், ஜெயபாரதி என்பவரிடம் அறிக்கைகளுடன் பகுப்பாய்வு செய்ய வேலூர் தடய அறிவியல் துறைக்கு மேற்படி காவலர் 2331 ராஜ்குமார் என்பவருடன் அனுப்பி வைத்தேன். அந்த படிவம்–95 மூலமாக கைப்பற்ற பொருட்கள் சாட்சி 16–ன் மூலமாக சா.பொ. 3 முதல் சா.பொ.5 வரை ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது.

சம்பவ இடத்தில் இருந்து கைபப்பற்ற பட்ட கைவிரல் ரேகைகளை ஒரு விரல் ரேகைக்கூடத்தில் ஆய்வு செய்ததில் நிபுணர் மேற்படி விரல் ரேகைகள் எதிரி அப்பு (எ) சங்கர ராமன் என்பவருடையது என்று தெரிவித்தன் பேரில் எதிரியின் வீடான எண்.217, முன்கோலா இரயில்வே கேட் அருகே மார்த்தாலி பெங்களூர் என்ற இடத்தில் வைத்து சாட்சிகள் வினோத் மற்றும் அப்பு (எ) தினேஷ் ஆகியோர்கள் முன்னிலையில் 03.04.2015 ம் தேதி விடியற்காலை 04.00 மணியளவில் கைது செய்து 04.15 மணிக்கு அதே சாட்சிகள் முன்னிலையில் எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி **அதசாஆ.11** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பிறகு மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் பெங்களுருக்கு சாட்சிகளுடன் அழைத்து சென்றதில் எதிரி அவரது

வீட்டில் மறைத்து வைத்திருந்து எடுத்து 05.15 மணிக்கு ஆஜர் செய்த கருப்பு நிற Micro Max Tab ஒன்று, அதன் பிறகு வங்கி மோதிரம் மற்றும் சாதா சிறிய மோதிரத்தை 05.20 மணிக்கும் அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். அந்த கைப்பற்றுதல் மகஜர்கள் முறையே **அதசாஆ.12** மற்றும் **அதசாஆ.13** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதன் பிறகு 01.30 மணிக்கு எதிரி அரக்கோணம் டி.என் நகர், முதல் குறுக்கு தெரு, பழனிப்பேட்டை விலாசத்தில் அவரது அக்கா இந்துமதி வீட்டில் வைத்து கருப்பு நிற லெதர் பாக்சில் நசுங்கிய நிலையில் பொன்னால் ஆன 5 இலை கம்மல் திருகாணியுடன் அதன் எடை சுமார் 1.180 மி.கீ கம்மல் போட பயன்படுத்தும் வெள்ளைநிற பிளாஸ்டிக் பட்டன்கள் இரண்டு கொண்டதை ஒரு கிளாஸ் பேப்பரில் சுற்றி வைக்கப்பட்டிருந்ததை எதிரி எடுத்து ஆஜர் செய்ததை சாட்சிகள் பாபு மற்றும் ராமன் முன்னிலையில் மகஜரில் கைப்பற்றி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் ஏற்கனவே அதசா.5 மூலம் அதசாஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

அதன் பிறகு, எதிரி காவல் நிலையம் அழைத்து வந்து முறையாக பிரேத பரிசோதனை செய்து பாரா காவலிடம் ஒப்படைத்து அன்றைய தினமே எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். மேலும் எதிரியிடம் இருந்து கைப்பற்றபட்ட வழக்கு சொத்துக்களை படிவம்-95 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த படிவம்-95 (ஆறு எண்ணிக்கைகள்) அவைகள் முறையே **அதசாஆ.14 முதல் அதசாஆ.19** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட Micro Max Tab **சா.பொ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. Simple City Family Shop Bill No.210 அது **சா.பொ.8** ஆக குறியீடு

செய்யப்படுகிறது. 1) முன்றாக மடிக்கும் லெதர் பார்ஸ் அதில் மினி பஜார் என குறியீடு செய்யப்பட்டுள்ளது மேலும், 2) T I M E, 3) Prameela Enterprises, 4) Visco Tech Engineers, 5) LPG Gas dealer Visiting Card–கள் கொண்ட புகைப்படங்கள் **சா.பொ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி கைப்பற்றுதல் மகஜர் சாட்சிகளான வினோத் மற்றும் அப்பு (எ) தினேஷ் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். நான் பணி மாறுதலில் சென்றதால் வழக்கு கோப்புக்களை எனக்கு பிறகு வந்த காவல் ஆய்வாளர் திரு.அருள் என்பவரிம் ஒப்படைத்து சென்றேன்.

எதிரி தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Jayamangalam Sudhakaran

II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2025.10.13 17:18:21 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.